# பயணியரை கவரும் மெட்ரோ இசை விழா

**சென்னை, டிச. 29–**
மெட்ரோ நிலையங்களில் நடத்தப்படும் இசை விழா, பயணியரை வெகுவாக கவர்ந்து வருகிறது.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இதன் நவீன தொழில்நுட்பம், வசதிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து, பொதுமக்களுக்கு தெரிவிக்க ஏதுவாக, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், மெட்ரோ நிலையங்களில், இசை, கலை விழா, இம்மாதம், 18ம் தேதி, ஆலந்துார் மெட்ரோ நிலையத்தில் துவங்கியது. கர்நாடக இசை, தமிழ் இசை, பரதநாட்டியம், பாட்டு கச்சேரி, தப்பாட்டம் உள்ளிட்டவை நடத்தப்பட்டன.



சென்னை, அசோக் நகர் மெட்ரோ நிலைய இசை விழாவில், தர்மாலயம் இசை பள்ளி மாணவர்களின் பாட்டு கச்சேரி நடந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, அசோக் நகர் மெட்ரோ நிலையதில் நடந்த இசை விழாவில், தர்மாலயம் இசை பள்ளியைச் சேர்ந்த, 50 மாணவர்களின் இசை கச்சேரி மற்றும் தனி நபர் பாட்டு கச்சேரியும் நடந்தன.

நிறைவு விழா, ஜன., 1ம் தேதி, வடபழநி மெட்ரோ நிலையத்தில் மாலை, 6:00 மணிக்கு நடக்கிறது. கலையகம் குழுவினரின் தப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.